பக்கங்கள் நான்கு
விலை ரூபா:- 4 . 50

# முரசொலி

முரசு 06 ஒலி 198 பிரேசாற்பத்தி வைகாசி 31 (14-06-1991) வெள்ளி

● செய்தியாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க

## பேச்சுகளுக்கான அரசின் நிபந்தனையில் மாற்றமில்லை

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை நடாத்த ஸ்ரீலங்கா அரசின் முன்னைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இவ்வாறு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய நாடொன்றில் நடைபெற வேண்டும் என்கின்றனர் ஆனால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளே நடைபெறவேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர். இதை ஏற்க முடியாது அரசு தனது பழைய நிபந்தனைகளில் எந்தவித மாற்றத்தை கொண்டுவரவில்லை புலிகள் வன்முறையை கைவிடவேண்டும் ஆயுதங்களை கைவிடவேண்டும். ஏனைய குழுக்களுடன் இணைந்தே பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என அமைச்சர் ரணில் குறிப்பிட்டார். அரச புதிதாக வாங்கவுள்ள வேவு விமானங்கள் குறித்த செய்தியாளர்கள் கேட்டபோது, கடல், தரை எல்லைகளை காக்க இந்த வேவு —04 ஆம் பக்கம் பார்க்க

# பிரெஞ் குழு மீதான தாக்குதல்

# ஆயுதப்படை காரணமல்ல!

### தனிநபர் ஆணைக்குழு அறிக்கை

பிரெஞ் மருத்துவக் குழுவான எம். எஸ். எப். மீது தாக்குதல் நடாத்தப்பட்டதற்கு அரச பாதுகாப்புப் படைகள் காரணமல்ல என கடந்த மே மாதம் வவுனியாவில் பிரெஞ் குழு மீதான விமானத் தாக்குதல் குறித்து விசாரணை நடாத்தி வந்த ஜனாதிபதி தனி நபர் விசாரணை ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நீதிபதி அக்கில தனி நபர் ஆணைக்குழு தனது விசாரணையின் இறுதி அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

சம்பவ தினமன்று பிரெஞ் மருத்துவக் குழுவின் வாகனம் அனுமதியளிக்கப்படாத வீதி வழியே சென்றமையே தாக்குதலுக்குள்ளானமைக்கு காரணம்.

8ஆம் வாகனம் ஒன்றிலிருந்து விமானங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது இதற்கு விமானம் பதில் தாக்குதல் நடாத்தியபோது தவறுதலாக பிரெஞ் வாகனம் பாதிக்கப்பட்டது என அந்த அறிக்கை கூறுகிறது.

இதனால் எம். எஸ். எப் மருத்துவக் குழுவுக்கு ஏற் —04ஆம் பக்கம் பார்க்க

### ஐரோப்பிய நாடுகள் மறுத்தமையே சீனாவிடம் விமானம் பெற காரணம்

ஸ்ரீலங்கா அரசுக்கு ஐரோப்பிய நாடுகள் போர்விமானங்களை விற்பனை செய்ய மறுத்தமையாலேயே சீனாவிடம் இருந்து அரசு போர் விமானங்களை கொள்வனவு செய்ததாக ஒழுங்கு செய்திகள் தெரிவித்தன.

சிவில் யுத்தம் நடைபெறுவதை சுட்டிக்காட்டியே ஐரோப்பிய நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு விமானங்களை வழங்க மறுப்பு தெரிவித்தனவாம்.

தற்போது சீனாவிடம் —04ஆம் பக்கம் பார்க்க

### மழையினால் ஒத்திவைக்கப்பட்ட

### நேற்றைய முத்தமிழ் விழா இன்று நடைபெறும் எனஅறிவிப்பு

நேற்று நடைபெற இருந்த 8 ஆம் நாள் முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள் யாவும் இன்று வழமைபோல் இடம்பெறவுள்ளதாக விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

நேற்று முற்றவெளி மாவீரர் அரங்கில் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மழைகாரணமாகவே இம் முடிவு அறிவிக்கப்பட்டது.

எனினும் நேற்று முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளை காண பல்லாயிரக்கணக்கானோர் பல திசைகளிலும் இருந்து வந்து —04 ஆம் பக்கம் பார்க்க

### காரைநகரில் இருந்து படையினர் மூளாய் நோக்கி ஷெல் தாக்கு

காரைநகரில் இருந்து படையினர் மூளாய், அராலித்துறை போன்ற பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 6மணி முதல் 7மணிவரை ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் இப்பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதேநேரம் பலாலியிலிருந்தும் இப்பகுதிக்கு ஷெல்கள் ஏவப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் சுழிபுரம் கடற் பகுதிகளில் கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு கடற்கரைப் பகுதிகளில் பீரங்கித் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர்.

இலநிலைக்களாக மாதகல், —04 ஆம் பக்கம் பார்க்க

### புலி இலச்சினை பதித்த கோட்டைக் கல்

யாழ் கோட்டையின் இடிக்கப்பட்ட கற்களில் புலி இலச்சினை பொறிக்கப்பட்டு இன்று —04 ஆம் பக்கம் பார்க்க

### வன்னித் தொகுதிக்கு 5ஆயிரம் ஆசிரியர்கள்

வன்னி தேர்தல் தொகுதியில் ஐயாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

# மட்டக்களப்பில் நடந்த பயங்கரம்

# 166 பொது மக்கள் படையினால் படுகொலை

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை மற்றும் அதை அண்டிய மூன்று கிராமங்களில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் 166 தமிழ் பொது மக்களை கொன்று குவித்துள்ளனர்.

இத்தகவலை நேற்றிரவு வெளியிட்ட இந்திய வானொலி இச் சம்பவத்தை யடுத்து இப் பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் செல்வதற்கு இராணுவ அதிகாரிகள் தடை விதித்துள்ளதாக யூ. என். ஐ செய்திகளை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டது.

கொல்லப்பட்ட அநேகர் வெட்டிக் கொல்லப்பட்டதாகவும் பலர் வீதிகளிலேயே போட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 400 வீடுகளுக்கும் படையினரால் தீவைக்கப்பட்டுள்ளது. இதே சமயம் இப் படுகொலை நேற்றுக்காலையும் தொடர்ந்ததாக தெரி —04ஆம் பக்கம் பார்க்க

### மட்டு., மன்னார் கண்ணிவெடி 6 படையினர் பலி; பலர்காயம்

மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கண்ணிவெடி தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மன்னார் [illegible] முகாமில் இருந்து வாகனம் [illegible] நோக்கி [illegible] —04 ஆம் பக்கம் பார்க்க

### அம்பாறையில் புலிகள் தாக்குதல் அதிகரித்துள்ளதாக அறிவிப்பு

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

[illegible] வீதி [illegible] ஏ, பக்கி எல்ல, வெல்லாவெளி, அரந்தலாவ, [illegible] ஆகிய பகுதிகளில் ரோந்து செல்லும் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

[illegible] —04 ஆம் பக்கம் பார்க்க

தமிழென்று தோள் தட்டி ஆடு- இன்பத்
தமிழ் வெல்க வெல்க என்றே நினம்பாடு

**யாழ் முற்றவெளியில் எழுச்சிமிக்க கோலாகலமான முத்தமிழ் விழா**

★ ராஜீவ் கொலை தொடர்பாக

## தமிழக முக்கிய அரசியல் தலைவர்கள் சிலர்

# எந்நேரமும் கைதாகலாம்!

ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்டது தொடர்பாக தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்கள் சிலர் கைதுசெய்யப்படவுள்ளதாகப் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொண்டுவரும் விசேட புலனாய்வுத்துறை அதிகாரியொருவரை மேற்கோள்காட்டி இச்செய்தியை ஏஜன்ஸி நிறுவனங்கள் சில வெளியிட்டுள்ளன.

இவர்கள் எந்நேரமும் கைதாகலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த அரசியல் தலைவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தவர்களென்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் சொத்துவிவரம் வெளியிட வேண்டும்

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மேயர், துணை மேயர் நகரசபைத் தலைவர் மற்றும் உபதலைவர் உள்ளிட்ட சகல உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களும் தமது சொத்து விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தாம் பதவியேற்கும் ஜூலை முதலாந்திகதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் சொத்துப் பிரகடனம் செய்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 24 ஆம் திகதி முதலுதவித் தினம்

பரிவோவான் முதலுதவிப் படையினரின் முதலுதவித் தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி உலகெங்கிலும் கொண்டாடப்படவுள்ளது. (19)

## கற்கைவட்டம் ஒத்திவைப்பு

இம்மாதம் 15ஆம் திகதி யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற இருந்த தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரிய மாணவர்களுக்கான ஒரு நாள் கற்கை வட்டம் முத்தமிழ் விழாவை முன்னிட்டு 16ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என யாழ் மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார். (ப-5)

## சீரணிநாகபூஷணி விசேட உற்சவம்

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 12 ஆம் திகதி புதன்கிழமை முதல் தினமும் விசேட பூசை மாலை 4.30 க்கு நடைபெற்று அம்பாள் உள்வீதியுலா வருதலும் இடம் பெற்று வருகிறது.

இறுதி நாள் 26 ஆம் திகதி புதன்கிழமை மழைமையான வருடாந்தப்பொங்கலும்நடைபெறும்.

## கைதடியில் நாளை

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவ சங்கத்தின் 24வது ஆண்டு விழா 15ஆம் திகதி சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவர்


## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

கிளிநொச்சி திருவையாறு இல:174 மூன்றாம் பகுதியைச் சேர்ந்த நடராசசந்திரமலை என்பவரின் மோட்டார் சைக்கிள் புத்தகமும், இன்சூரன்ஸ் ரசீது, வடபிராந்திய கூட்டுறவுத் தொழிலாளர் சங்கப் பற்றுச்சீட்டு ஒன்றும் (12-6-91) காலை வேரவில் - கிளிநொச்சிக்கிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தோர் பூநகரி, அல்லது கிளிநொச்சி முரசொலி முகவரிடம் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம்வழங்கப்படும். 06053

**தேவை**

சவுக்கு விதை தேவை, மில்க்வைற், யாழ்ப்பாணம். 06054

## கதகளி பரத நாட்டியம்

நீராவியடி வண் - வடமிழக்கு சனசமூக நிலைய நிதி உதவிக்காக

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் 7. 7. 91 பி. ப. 3 மணிக்கு

கதகளி பரத கலாமணி இலங்கை வேந்தன் நடனக் குழுவினரின்

## 'கதகளி பரத நாட்டியமும்'

100 வது மேடையாக புலவர் தட்சணாமூர்த்தியின்

## 'பண்டார வன்னியன்'

(சரித்திர நாடகம்)



பண்டார வன்னியனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி 06055



() ★ () () ★ ()

## கை கொடுங்கள்!

உங்கள் குழந்தையின் வளமான எதிர்காலத்திற்கு கைகொடுங்கள்!!

அதற்காக இன்றே

## ஷப்றாவுடன்

இணைந்து சேமியுங்கள் !!!

**நிதித் துறையில் நேசக்கரம் நீட்டும் நண்பன்**

# ஷப்றா

## யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

2. ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04. தொலைபேசி எண் - 508087-80

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

06052

தமிழீழத்தின் { நேற்றைய தம்பி / இன்றைய தலைவன் / நாளைய தந்தை

எம் தலைவரின் புகழை இந்த முத்தமிழ் விழாவில் பரணி பாடிடுவோம்

## ஹோமியோபதி

## டிப்ளோமா வகுப்புகள்

(D. H. M. S.)

- ☐ தமிழீழத்தின் தனிப்பெரும் ஹோமியோபதி வல்லுநர்களின் விரிவுரைகள்.
- ☐ தமிழ்மொழி மூலம் பயிற்சிகள்.
- ☐ மருத்துவப் பதிவுகள் யாவும் செய்து தரப்படும்.
- ☐ 19 - 6 - 91 இல் ஆரம்பம்.

அதிபர்

**வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்**

சாயி மருத்துவக் கல்லூரி

இல. 6, பருத்தித்துறை வீதி, (1 ஆம் ஒழுங்கை) யாழ்நகர்.

(மாவீரர்கள் / போராளிகள் குடும்பத்தவர்க்கு இலவச பயிற்சிகள்).

06050

# அடையாள அட்டை புதுப்பித்தல் அறிவுறுத்தல் கிடைக்கவில்லை

தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பித்தல் சம்பந்தமான எந்தவித அறிவுறுத்தல்களும் யாழ் செயலக ஆட்பதிவுத்திணைக்களத்துக்கு இதுவரை வந்து சேரவில்லை.

1972-ம், 73-ம் ஆண்டுகளில் ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகம் செய்யப்பட்ட தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பித்தல் தொடர்பாக வானொலியிலும், பத்திரிகைகளிலும் அறிவிக்கப்பட்ட செய்திகள் தொடர்பாக யாழ் செயலக ஆட்பதிவு அலுவலகப் பிராந்தியப் பொறுப்பாளர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

வானொலி, பத்திரிகைச் செய்திகளின் படி தமிழ் வின் தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பித்தல் தொடர்பான கருமங்களை மேற்கொள்வதற்கு வீணாக இப்பணிமனையை நோக்கிக்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பலர் வருகை தருகின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். 47

# அ. தி. மு. க. கட்சிக் கொடியை தி. மு. க. வினர் தீயிட்டெரித்தனர்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தி. மு. க. ஆதரவாளர்கள் அங்குள்ள கட்டிடங்கள் வீடுகள் ஆகியவற்றில் கட்டப்பட்டிருந்த அ. தி. மு. க. கொடியை அறுத்துத் தீயிட்டுள்ளார்கள். இப்படியான சம்பவங்கள் பரவலாக எல்லா இடங்களிலும் நிகழ்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செயல்கள் பழிவாங்கும் நடவடிக்கைகள் என்று தெரிய வருகிறது.

பெரம்பலூர் என்ற ஊரில் அ. தி. மு. க. நடத்திய ஊர்வலத்தில் குண்டு வீசப்பட்டதில் ஐந்து பேர் காயமடைந்தனர். கோயம்புத்தூரில் அ. தி. மு. க. காரியாலயம் தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி மரணத்துக்குப் பின் அ. தி. மு. க. வினர் தி. மு. க. வினர் மீது நடத்திய தாக்குதலுக்கு எதிர் நடவடிக்கையாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதெனத் தெரியவருகிறது.

# தூரதர்ஷன் தலைவர் மீது புதுடில்லியில் துப்பாக்கிச் சூடு

இந்திய தொலைக்காட்சி நிறுவனமான தூரதர்ஷன் தலைவர் சிவஷர்மா நேற்று புதுடில்லியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்தார்.

வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு அவர் தமது காரில் சென்றுகொண்டிருந்த போது வானில் வந்த சில தீவிரவாதிகள் கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் சிவஷர்மா படுகாயமடைந்தார். வேறு இரு தூரதர்ஷன் அதிகாரிகளும் காரின் சாரதியும் பலியாகினர்.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து புதுடில்லியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளனவாம்.

**காரைநகர்—**

வழிபுரம் பகுதிகளில் உள்ள கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்து அதிகரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன் மாதகல் கடற்கரைப் பகுதிகளில் பிரவேசித் தாக்குதல் நடாத்தியும் மீன்பிடிக்கச் சென்ற இருவரையும் கடற்படையினர் சுட்டதும் தெரிந்ததே. 79,12

**மட்டக்களப்பில...**

விக்கப்படுகிறது.

இதனிடையே கொக்கட்டிச் சோலையில் விமானத்தாக்குதலும் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று முதல் நீக்கப்படுவதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

**பேச்சுக்களுக்கான...**

விமானங்கள் அவசியம் எனவும் அண்மையில் இனந்தெரியாத சில விமானங்கள் இந்த நடவை எல்லையின் மீறக ஊடுருவிச் சென்றமை எமது ராடர் கருவியில் பதிந்துள்ளது எனவும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். இந்த ஊடுருவல்களைத் தடுக்க அரசு புதிதாக எவ்வேறு விமானங்களை கொள்வனவு செய்கிறது. இவை இரண்டு விமான அணிகளாக செயற்படும் என பிரட்மன் மேலும் தெரிவித்தார்.

**ஐரோப்பிய...**

இருந்து அரசு எவ்-7 ஜெட் போர் விமானங்களை கொள்வனவு செய்கிறது. முன்னர் இத்தாலியே 'மார்செட்டி' ரக குண்டு வீச்சு விமானங்களை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**பிரெஞ்சுகுழு—**

பட்ட சேதத்துக்கும் உறுப்பினர்கள் காயமடைந்தமைக்கும் அரசு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறது. இதே சமயம் தாக்குதலுக்கு அரச படைகள் காரணம் இல்லை என்று அறிந்ததில் நிம்மதியடைந்துள்ளது என இந்த அறிக்கை குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்த பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அக்கிலி ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையில் சிபாரிசுகளையும் வெளியிட்டுள்ளது.

நிவாரணக் குழுவினர் தமது பயண அனுமதியை கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற வேண்டும். உயரத்திலேயே பறக்கும் விமானப்படை விமானங்கு "கிளைரோ ரபீனைசர்" தொலைக்காட்டிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் அவர்கள் தரையை தெளிவாகப் பார்க்க முடியும். விமானப்படையினருக்கு வாகனத்தில் செல்வோர் கீழே இறங்கி தமது அடையாளத்தைக் காட்ட வேண்டும், தொண்டர் நிறுவனங்கள் மிகத் தெளிவாக தமது இலச்சனைகளை வாகனத்தில் பொறித்திருக்க வேண்டும் போன்ற சிபாரிசுகள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி "லக்ஷ்மி" பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 14. 06. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கஸினோ சூதாட்டக் காரரிடம் பொலிஸார் லஞ்சம் பெற்றனர்

கஸினோ சூதாட்டத்தை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் சில பொலிஸ் உயர் அதிகாரிகள் சூதாட்ட உரிமையாளர்களிடம் லஞ்சம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உயர்ந்தரக குடிவகைகளையும், பெறுமதியான பொருள்களையும் அன்பளிப்பாகப் பெற்றுள்ளதாக லஞ்சத் திணைக்களத்துக்கு புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சில பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளைகளுபோவிலையில் வீடொன்றில் இருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த எழுபத்தைந்து ஜாக்பொட் இயந்திரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## போலிப் பாஸ்போட்டுகள்

# லெபனானிலிருந்து 3 பெண்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

போலி பாஸ்போட்டுகளுடன் லெபனான் சென்ற மூன்று இலங்கைப் பெண்கள் கடந்த வியாழன் அங்கிருந்து திருப்பியனுப்பப்பட்டனர்.

இவர்களின் பாஸ்போட்டுகளில் படங்களை அகற்றி வேறு படங்கள் ஒட்டப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாலேயே திருப்பி அனுப்பப்பட்டனராம்.

படம் மாற்றி பாஸ்போட் செய்விக்க தாம் பதினைந்தாயிரம் ரூபாவை ஏஜன்சிக்கு கொடுத்ததாகவும் அவர்கள் கூறினர். 13

# ஆலயத்திருவிழாவில் யானை பங்கு பற்றும்

வட்டுக்கோட்டை வீரபத்திரர் கோவில் 7ஆம் திருவிழாவான நாளை சனிக்கிழமை யானை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் விசாலாட்சி சமேத காசிவிசுவநாதப் பெருமான் வீதிவலம் வரும்போது இந்த யானையும் வீதிவலம் வரவிருக்கிறது. 12

## மாலைதீவில் உள்ள 18 மீனவர்கள்

# இலங்கை உறுதிமொழி அளித்தாலே தண்டனை மீள்பரிசீலிக்கப்படும்

எதிர்காலத்தில் இலங்கை மீனவர்கள் மாலைதீவு கடலினுள் ஊடுருவமாட்டார்கள் என உறுதிமொழி அளித்தாலே மாலைதீவில் சிறைத்தண்டனை அனுபவிக்கும் இலங்கை மீனவர்களை விடுவிக்க முடியும் என மாலைதீவு அரசு அறிவித்துள்ளது.

மாலைதீவு வெளியுறவு அமைச்சு இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹெரல்ட் ஹேரத்துக்கு அறிவித்துள்ளது. இலங்கை அரசு இவ்வுறுதி மொழியை அளிப்பின் அங்குள்ள 18 இலங்கை மீனவர்களின் சிறைத்தண்டனையை மீள் பரிசீலனை செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரிய இடமாற்றங்கள் தற்காலிகமாக நடைபெறுகிறது

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் தற்போது மாவட்ட அடிப்படையில் ஆசிரிய இடமாற்றங்கள் தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்துக்கு நடைபெறுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து ஆசிரியர்கள் யாழ்ப்பாணமாவட்டத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள். பின்னர் இவர்கள் கோட்டங்களுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் இடமாற்றக்கடிதத்தில் இவர்களது சம்பளம் இக்காரியாலயத்தினூடாக பெறப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்காததினால் இவர்கள் தமது சம்பளத்தை பெறுவதற்கு மிகுந்த சிரமப்படுவதாக தெரிகின்றது. 78

**அம்பாறையில்...**

பித்து ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டே இவ்வாறு புலிகள் தாக்குவதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**நேற்றைய—**

குவித்திருந்தனர்.

முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளன. 74,79

**வன்னி...**

ஆரம்ப பாடசாலைகளுக்கே இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வவுனியா, மன்னார் முல்லைத்தீவு உள்ளடக்கியபிரதேசம் வன்னித்தொகுதியாகும். 11

**மட்டு—**

வாகன படையினர் வந்தபோது இனியபாரதிபுரம் என்ற பகுதியில் வைத்து புலிகள் கண்ணிவெடித்தாக்குதலை தொடுத்தனர்.

இதனால் வாகனம் பலத்த சேதமடைந்தது. வாகனத்தில் இருந்தவர்களில் 3 படையினர் பலியானதாகவும் பலரும் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை முகாமில் இருந்து நேற்று முன்தினம் நண்பகல் படையினர் உழவு இயந்திரத்தில் மண்முனைப்பகுதிக்குச் சென்று திரும்பிய போது புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

முகாமில் இருந்து 700 யார் தூரத்தில் நடைபெற்ற இத்தாக்குதலில் உழவு இயந்திரத்தில் இருந்த 3 சிப்பாய்கள் பலியானதாகவும் சில சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**புலி—**

நடைபெறும் முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் விற்பனைக்கு வைக்கப்படுகிறது.

# மிதிவெடியில் சிக்கி இறந்தவர் மாலைதீவில் இருந்து வந்தவர்

கடந்த திங்கட்கிழமை வவுனியா நொச்சிமோட்டையில் மிதிவெடியில் சிக்கி மரணமானவர் 'புளொட்' இயக்க உறுப்பினர் முருகேசு இரத்தினவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுனியா செய்திகள் கூறுகின்றன.

மாலைதீவில் 1988 நவம்பரில் இடம்பெற்ற புரட்சிச்சதி தொடர்பாக கைதாகி விடுதலையான 88 புளொட் உறுப்பினர்களில் இவரும் ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவில் சம்பந்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் தற்போது வவுனியாவில் படையினருடன் சேர்ந்து இருப்பது தெரிந்ததே.

# அடுத்த ஆண்டுக்கான பட்ஜட் நவம்பர் 12 இல் சமர்ப்பிக்கப்படும்

எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி 1992 ஆம் ஆண்டுக்கான பட்ஜட் பாராளுமன்றத்தில் நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி. விஜேதுங்கவினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பட்ஜட் கூட்டத்தொடர் டிசம்பர் 19 ஆம் திகதிவரை குழு நிலை விவாதங்களாக நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கஸினோ சூதாட்ட தடைகுறித்து ஜனாதிபதிக்கு முறையீடு

கஸினோ சூதாட்டத்தை அரசு தடை செய்ய எடுத்த நடவடிக்கை குறித்து ஹொங்கொங் கஸினோ நிலையத்தின் உரிமையாளர் ஜனாதிபதி பிரேமதாஸவிடம் முறையிட்டுள்ளார்.

சட்டரீதியாக அனுமதி பெற்று நடாத்தி வந்த தமது கஸினோ சூதாட்ட நிலையம் மூடப்பட்டது அநியாயமானது என்று இதன் உரிமையாளரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

ஹொங்கொங்கில் உள்ள கனுானா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட் நிறுவனமே 1990 பெப்ரவரியில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் மூன்று லட்சம் டொலர் முதலீட்டுடன் கஸினோவை ஆரம்பித்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் திடீர் நடவடிக்கையில் இங்கு பணிபுரியும் 450 ஊழியர்கள் வேலையை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எமது சூதாட்ட நிலையத்தில் கடத்தல், விபசாரம், போன்ற குற்றச்சாட்டுகள் எதுவுமே இடம்பெறவில்லை இவ்வாறு அவர் கூறினார்.

# திருடர் கைவரிசை

கடந்த சில தினங்களாக மாங்குளம் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

நாது ஏக்கர் சண்முகராசா என்பவரது வீட்டில் பெறுமதியான விவசாயப் பாவனைக்கான உபகரணங்களை திருடர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.